# பட்டயம்

மலர் - 06 ஜுன் - 2010 இதழ் - 8

Date of Issue : 01-06-2010

Pla... 222H, Main Road,
...agudi - 627 109.
...unelveli District, Tamil Nadu.

Vol...

Iss... Price Per Copy : Rs.5.00

battam-june.jpg
Type: JPG File
Size: 25.9 MB
Dimension: 7253 x 5550 pixels

## சத்திய மலர்



பிதா குமாரன் ஆவியானவரே!
ஆவி ஆத்தும சரீரத்தில் வல்லமையருளும்.

O LORD! BAPTIZE ME WITH THE HOLY GHOST AND FIRE (LK 3:16)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

**152. ஏன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும்?**

ஆண்டவர் நமக்கு அன்பின் தேவனாய் இருக்கிறார். அவரே நமக்கு அப்பாவாக, அம்மாவாக இருக்கிறார். தகப்பனும் தாயும் நம்மைத் தள்ளி விட்டாலும் அவர் நம்மைச் சேர்த்துக் கொள்ளுவார். அவர் நம்மை அணைக்கிற தேவன். சிலருக்கு நல்ல பெற்றோர் இருக்கிறார்கள். சிலருக்கு நல்ல பெற்றோர் கிடைக்கவில்லை. எது கிடைத்தாலும் ஸ்தோத்திரம். ஏனென்றால் அந்த பெற்றோர்கள் இல்லாமல் நாம் பூமியில் வரவில்லை. அவர்கள் உங்களை பெற்றெடுத்தபடியால் அவர்கள் உங்களை வெறுத்தாலும் அவர்களை நேசியுங்கள். தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக. என யாத் 20/12 கூறுகிறது. அவர்கள் உங்களை கனவீனம் பண்ணினாலும் அவர்களை கனம் பண்ணுங்கள். அவர்கள் உங்களை மதிக்காவிட்டாலும், நேசிக்காவிட்டாலும் அவர்களை மதியுங்கள்; நேசியுங்கள். இப்படிப்பட்ட சோதனைகள் உங்களுக்கு வந்தாலும் பரமபிதாவின் கட்டளை எதுவோ அதற்குக் கீழ்படியுங்கள்.

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; அவன் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். பபீடம் கட்டி கர்த்தரைத் தொழுது கொண்டவன் தான். ஆனால் அவன் பின் வாழ்க்கையில் குடித்து வெறித்து வஸ்திரம் விலகிப்படுத்திருந்தான் என ஆதி 9/21 கூறுகிறது. காம் தன் தகப்பனை கனவீனம் பண்ணியது ஆண்டவர் பார்வையில் குற்றமானது. சேமும், யாப்பேத்தும் தந்தையை கனவீனம் பண்ணவில்லை. நோவா காமை சபித்தான்; சேமையும் யாபேத்தையும் ஆசீர்வதித்தான்.

உங்கள் பெற்றோர் ஒருவேளை குடித்து, வெறித்து பல விதமான காரியங்களை உங்களுக்கு விரோதமாகச் செய்யலாம். உங்கள் பெற்றோர் பொல்லாதவர்களாக இருந்தாலும் நீங்கள் வாழ்வில் வெறுப்பு அடையக்கூடாது. பொல்லாத பெற்றோர்கள் இருந்தாலும் நல்ல பரம பிதா நமக்கு இருக்கிறார். பூமியில் உங்கள் பெற்றோர் இரட்சிக்கப்பட்டிருந்தால் பரலோகத்திற்கு வருவார்கள். இரட்சிக்கபடவில்லையென்றால் நரகத்துக்குத் தான் போவார்கள். ஆனால் இயேசு நேற்றும் இன்றும் என்றும் நம்மோடு இருக்கிறார். பூமியில் உங்கள் தாய் தகப்பன் மரித்துப் போய் இருக்கலாம். பெற்றோர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உனக்கு பரம தகப்பன் பரலோகில் உண்டு. பூமியில் உங்கள் தாய் தகப்பன் அன்பு உங்களுக்கு கிடைக்காவிட்டாலும், பரலோகிலுள்ள ஆண்டவரின் அன்பு உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். அவர் அன்பில் மாறுவதில்லை. ஆகையால் அவரை உறுதியாய் பற்றிக் கொள்வோம்.

**153. ஜீவனுள்ள தேவனை ஆராதிப்பவர்கள் எப்படி இருக்க வேண்டும்?**

பலவிதமான ஆராதனைகள் இருக்கின்றன.

1. பிசாசுக்கு ஆராதனை
2. மனுஷனுக்கு ஆராதனை
3. தூதருக்கு ஆராதனை
4. சுய இஷ்டமான ஆராதனை
5. மரித்தவர்களுக்கு ஆராதனை
6. கல்லறை ஆராதனை
7. ஒளி ஆராதனை
8. தீப ஆராதனை

ஆண்டவருக்கே ஆராதனை செய்யுங்கள். வேறு எதற்கும் ஆராதனை செய்ய கூடாது. உன் தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என மத் 4/10 கூறுகிறது. தேவனை ஆராதிப்பவர்கள் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் அவரை அதிகமாக நேசிக்க வேண்டும். தேவனைக் காட்டிலும் நீ வேறு எதன் மேலாகிலும் பற்று வைப்பாயானால் நீ ஆண்டவரை அதிகமாக ஆராதிக்க முடியாது. உன் மனம் அதற்கு இடம் கொடுக்காது.

கர்த்தரை ஆராதிக்கும் போது சந்தோஷம் வரவேண்டும். அவரை உற்சாகமாக ஆராதிக்க வேண்டும். பரலோகில் நாம் ஆராதிக்கத் தான் போகிறோம். அதற்கு பூமியில் இருக்கும் போதே பயிற்சி எடுக்க வேண்டும். வாரத்தில் 3 மணி நேரம் ஆராதிக்க வருவதே சிலருக்கு பெரிய கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட மக்களை பரலோகில் கொண்டு போய் வைத்தால் எப்படி இருக்க போகிறார்கள்?

நாம் எந்த அளவுக்கு ஆண்டவரிடத்தில் அன்பு கூருகிறோம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஆண்டவரை ஆராதிக்க வரும் ஜனத்திற்கு அவர் மேல் பக்தி, பற்று, பயம் இருக்க வேண்டும். பயத்துடன் கர்த்தரைச் சேவிக்க வேண்டும்; நடுக்கத்துடனே களிகூர வேண்டும் என சங்கீதம் 2/11 கூறுகிறது.

**154. ஆண்டவர் மேல் நாம் வைக்கும் பக்தி எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்கக் கூடாது?**

வாழ்விலும், தாழ்விலும் தேவனை நேசிப்பது தான் பக்தி. சிலர் எல்லாம் நன்றாக இருந்தால் பக்தியாக இருப்பார்கள். ஏதாவது குறைந்து போனால் இவர்கள் பக்தியெல்லாம் பறந்து போய்விடும். எல்லா விதத்திலும் நம்மைச் சோதித்து பார்த்து, பின்பு தான் பரலோகம் கொண்டு செல்வார். பரலோகம் போகிற மக்களுக்கு சோதனைகள் உண்டு.

1. பாவ சோதனை
2. மனுஷரால் சோதனை

3. சாத்தானால் சோதனை

4. ஆண்டவரால் வரும் சோதனை (விசுவாச சோதனை)

எந்த அளவுக்கு உனக்கு பக்தி இருக்கிறது என்பதை நிறுத்துப் பார்ப்பார். கடைக்கு சென்று ஒரு பொருள் வாங்கினால் அதை சோதித்து பார்த்து தான் வாங்குகிறோம். கண்களை மூடிக்கொண்டு வாங்க மாட்டோம். எது நல்லது, எது கெட்டது என்பதை சோதிக்கிறோம். அதைப் போல தேவனும் நம்மை சோதித்துப் பார்ப்பார்.

**குரங்கு பக்தி :** குட்டி தான் தாயைப் பிடித்துக் கொள்ளும். குரங்கு பக்தி உள்ளவர்களை ஆண்டவர் தான் பிடித்து வைத்திருக்கிறார். இவர்களுக்கு சில பிரச்சனைகள் இருக்கும், அவைகள் தீர்ந்து விட்டால் ஆண்டவரை விட்டே ஓடி விடுவார்கள்.

**பூனை பக்தி :** பூனை வாயில் தன் குட்டியைக் கொண்டு செல்லும். இது வாய் அளவில் தேவனைத் தேடுவது, சோற்றுக்காக வயிற்றுக்காக தேவனைத் தேடுவதைக் குறிக்கும். கேட்பதெல்லாம் கிடைத்தால் மட்டும் சிலருக்கு வாயில் ஸ்தோத்திரம் வரும். இப்படிப்பட்ட பக்தி இருக்கக் கூடாது.

**கங்காரு பக்தி :** கங்காரு பையில் குட்டியை போட்டு சுமந்து செல்கிறது. கையில் பிள்ளையைப் பிடிப்பதற்கும், பையில் போட்டுக் கொள்வதற்கும் வித்தியாசம் உண்டு. எந்த நேரம் குட்டி கீழே விழும் என சொல்ல முடியாது.

மனிதனோ இடுப்பில் பிள்ளையை வைத்து அணைத்துக் கொள்கிறான். அது போல நாம் ஆண்டவரோடு இணைந்து கொள்ள வேண்டும். பிள்ளை தாய் மேலும், தாய் பிள்ளை மேலும் பாசமாய் இருக்கிறது. போல நீங்கள் ஆண்டவர் மேல் பாசமாயிருக்கும் போது அவரும் உங்கள் மேல் பாசமாய் இருப்பார்; பற்றுதலாய் இருப்பார். ஒரு தாய் பிள்ளையை பற்றிக் கொள்வது போல இடைவிடாமல் ஆண்டவரைப் பற்றிக் கொள்ள வேண்டும். அவரை விட்டுப் பிரிய கூடாது. இப்படிப்பட்ட ஜனத்திற்கு ஆண்டவர் மேல் பற்றுதல் இருக்கிறது. வறண்டதும் விடாய்த்ததுமான உலகில் நம் ஆத்துமா ஆண்டவர் மேல் தாகமாய், பற்றுதலாய் எப்போதும் இருக்க வேண்டும். இது தான் உண்மையான பக்தி.

**155. கர்த்தர் நம் கையில் கொடுத்த பாத்திரத்தை எப்படி நிறைவேற்ற வேண்டும்?**

இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி

செய்யும். ஆனாலும் என் சித்தத்தின் படியல்ல, உம் சித்தப்படியே ஆகக் கடவது என இயேசு ஜெபித்தார்.

ஒருவரை ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம் செய்ய அனுப்புகிறார். இன்னொருவரை பட்டணத்தில் ஊழியம் செய்ய அனுப்புகிறார். பட்டணத்தில் ஊழியம் செய்பவருக்கு எந்த கஷ்டமும் இல்லை. ஒரு ஊழியர் கையில் கஷ்டமான பாத்திரத்தைக் கொடுக்கிறார். இன்னொரு ஊழியரிடம் லேசான பாத்திரத்தைக் கொடுக்கிறார். கஷ்டமான பாத்திரத்தை சுமக்கிற ஊழியர் மற்ற ஊழியரிடம் "நாம் இருவரும் நமக்குரிய ஊழியத்தை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்வோம்; எனக்குப் பதிலாக நீ இந்த இடத்திற்கு போ; உனக்கு பதிலாக நான் போகிறேன்" என சொன்னால் ஆண்டவர் விடமாட்டார். யாருக்கு எது கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதை அவர்கள் தான் செய்ய வேண்டும். வேண்டுமானால் ஆண்டவரே! என் பாரங்களைக் குறைத்துத் தாரும் என கேட்கலாம். "என் சொல்லுக்கு கீழ்படி; இந்த நைஜீரியா தேசத்தில் ஊழியம் செய்ய நான் உனக்கு உதவி செய்வேன்" என ஆண்டவர் சொன்னால் கீழ்படிந்து தான் ஆக வேண்டும். அவரிடம் சாக்குப்போக்கு சொல்ல முடியாது.

பட்டணத்தில் ஊழியம் செய்பவர்களுக்கு மனுஷர்களால் வரும் புகழ்ச்சி உண்டாகிறது. ஆனால் பட்டிக்காட்டில் ஊழியம் செய்பவர்களுக்கு மனுஷரால் வரும் புகழ்ச்சி கிடைக்காது. ஆண்டவர் நம் கரத்தில் கொடுக்கும் பாத்திரத்தை அவர் சித்தப்படி நிறைவேற்ற வேண்டும். மோசே தான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என சாக்குப்போக்குச் சொன்னான். ஆரோனை அவனோடு கூட அனுப்புவதாக தேவன் சொன்னார். அதற்கு மேல் மோசேயினால் எதையும் சொல்ல முடியவில்லை. பிதாவாகிய தேவன் நமக்காக மரிக்கும் படியான பாத்திரத்தை இயேசுவிடம் கொடுத்தார். ஆகவே இயேசு ஒரு அடிமையின் ரூபம் எடுத்து வந்தார். என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என ஜெபித்தார்.

சில பாத்திரங்களை ஆண்டவர் நம்மை விட்டு நீக்க முடியும். சில பாத்திரங்கள் அவர் சித்தமானால் நாம் அதை சுமந்துத் தான் ஆக வேண்டும். அவர் சித்தத்திற்கு நாம் இசைந்து தான் போக வேண்டும். சில பாத்திரங்களை நாம் சகித்துத் தான் போக வேண்டும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசியை தேவன் உபவாசிக்கச் சொன்னார். அளவு சாப்பாடும், அளவு தண்ணீரும் தான் உட்கொள்ள வேண்டும். மனுஷ வறட்டியால் அப்பம் சுடுவாயாக என்றார். ஆனால் எசேக்கியேல்

ஆண்டவரே இது என்னால் சகிக்க முடியாது என கேட்டபோது மனுஷ வறட்டிக்கு பதிலாக மாட்டுச் சாணியைப்க் கொடுத்தார். கோதுமை, வாற்கோதுமை, பெரும்பயறு, சிறுபயறு, தினை, கம்பு இவைகளை வைத்து அப்பம் சுடச்சொன்னார். வயிறு நிறைய சாப்பிடவும் கூடாது. பால், இறைச்சி, மீன், முட்டை புசிக்கக் கூடாது. சைவ உணவு மட்டும் தான் புசிக்க வேண்டும். இப்படி 430 நாட்கள் அளவு சாப்பாடு சாப்பிட சொன்னார். இது ஒரு நேர உணவாக இருக்கலாம். இது ஒரு வகை உபவாசமாகும். (எசேக்.4)

ஆண்டவர் முன்பாக நம்மைத் தாழ்த்துவதற்குத் தான் உபவாசம். நம்மை பட்டினி போட்டு கொல்வதற்காக அல்ல உபவாசம். எசேக்கியேல் கீழ்படிந்தது போல ஆண்டவரும் நமக்கு கைகளிலே எந்தப் பாத்திரத்தைக் கொடுக்கிறாரோ அதற்கு நாம் கீழ்படிய வேண்டும். அவரவர் செய்கிற காரியங்களுக்கு நிச்சயமாக பரலோகத்தில் பலன் உண்டு.

**ஜெபம் :** அப்பா! பிதாவே! நான் செய்யும்படி நீர் என் கையில் கொடுத்த பாத்திரத்தை, நீர் என்னை அழைத்த காரியத்தில் என்னை உண்மையுள்ள வனாய் நிறுத்தும்; உறுதியுள்ளவனாய் நிறுத்தும். அது கடினமான காரியமாக இருந்தாலும் அதை நிறைவேற்ற உதவி செய்யும். அந்த காரியத்திலே மனுஷர் புகழ்ச்சி வராமல் போனாலும் அதை நிறைவேற்ற எனக்கு உதவி செய்யும் ஆமென்.

## 156. இயேசு நமக்காக எப்படி இரத்த வேர்வை சிந்தியிருக்க முடியும்?

அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது (லூக்.22/44). ஒருவர் ஜெபிக்கும் போது எப்படி இரத்த வேர்வை வரும் என நினைக்கலாம். அவர் கெத்சமனே தோட்டத்தில் எப்படி ஜெபித்தார் என எபி 5/7 கூறுகிறது. அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார். அவர் நமக்காக பரிந்து பேசி ஜெபித்தார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படும் படியாக எல்லாருக்காகவும் ஜெபித்தார். கெத்சமனேயில் அவ்வளவு பாரத்தோடு ஜெபித்ததால் இரத்த கொதிப்பு அதிகரித்து, ஒரு வேளை அவர் மூக்கிருந்து இரத்தம் வந்திருக்கும்; முகத்திருந்து வேர்வை வடிந்திருக்கும்; இரத்தமும் வேர்வையும் சேர்ந்து இரத்த வேர்வையாய் தரையில் விழுந்தது. யோ 19/20ல் போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவர் விலாவிலே

குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அந்த ஈட்டி அவர் இதயத்தில் பாய்ந்தது. இதயத்திருந்து இரத்தம் வெளியேறியது. இருதயத்தை மட்டுமல்ல இரைப்பையையும் குத்தி கிழித்தது. வயிற்றிலுள்ள தண்ணீரும் வெளியே வந்தது. கெத்சமனேயிலும், கல்வாரி சிலுவையிலும் இயேசு நமக்காக கண்ணீரும் சிந்தினார். செந்நீரும் சிந்தினார்.

### 157. சபை கூடும் நாளை ஏன் விசேஷமாக எண்ண வேண்டும்?

ஓய்வு நாளில் சுமைகளை எருசலேமின் வாசல்களுக்குள் எடுத்துக் கொண்டு போககூடாது (எரே 17/37); ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. நமக்கு 6 நாட்கள் வேலை செய்ய தந்திருக்கிறார். அவருக்காக ஒரு நாளை கொடுக்க வேண்டும். முழு பெலத்தோடு நன்றாக வேலைகளைச் செய்யுங்கள். ஆனால் 7ம் நாளை கர்த்தருக்கு அடுத்த காரியமாக நாம் பயன்படுத்த வேண்டும். ஓய்வு நாளை rest எடுக்கும் நாளாக நினைக்கக் கூடாது. அன்று கயாண வீட்டுக்குப் போக கூடாது. சனிக்கிழமையே போய் விட்டு வர வேண்டும். அவர்கள் முட்டாள்தனத்தில் நாம் சிக்கிக் கொள்ளக் கூடாது. ஆண்டவர் காரியத்திலே உறுதியாக இருங்கள். ஓய்வு நாளில் செய்யப்படுகிற காரியங்கள் கர்த்தருடைய ராஜ்ய பணிகளுக்கடுத்ததாக இருக்க வேண்டும்.

கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்தார். அதை பரிசுத்த மாக்கினார். ஓய்வுநாளில் இன்னும் பரிசுத்தமாக என்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். உங்களைப் பரிசுத்தப் படுத்தும் வார்த்தைகளுக்கு அதிகமாக இடம் கொடுங்கள். ஓய்வு நாளில் அதிகமாக வேதவசனத்தை வாசியுங்கள். தேவ சமுகத்தில் காத்திருங்கள். ஆராதனை நாளை அசட்டை செய்யாதிருங்கள்.

ஓய்வுநாளை மகிமையான நாளாக எண்ணுவாயானால், யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பார் (ஏசாயா58/13)

1. கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்

ஒரு வாரம் ஆராதனைக்குச் செல்லாவிட்டால் காரணமில்லாத துக்கம் தான் வரும்.

2. பூமியில் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணுவார்

சாத்தானாலும், சத்துருக்களாலும் வந்த எல்லா கனவீனங்களை யும் மாற்றி மனுஷர் முன்பாக உயர்த்துவார்.

3. உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பார்.

யாக்கோபைக் கொண்டு என்ன செய்தாரோ அதை உன்னைக் கொண்டும் செய்வார்.

## 158. ஆராதனை முக்கியமா?

ஆலயத்தைக் காட்டிலும் ஆலயத்திலே நடக்கிற ஆராதனை தான் பெரியது. தங்கத்தில், வைரத்தில் ஆலயம் கட்டி வைத்திருந்தாலும், சரியாக நீ ஆராதிக்காவிட்டால் பிரயோஜனமில்லை. தேவனுக்குப் பிரியமாக நீ ஆராதிக்க வேண்டும். ஆராதனைக்கு நேரமே கடந்து போய் உற்சாகமாக ஆராதிக்க வேண்டும்.

ஆண்டவர் மறுரூபமலையில் மறுரூபமானார். ஆண்டவரே நாம் இங்கேயிருப்பது நல்லது, உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எயாவுக்கு ஒரு கூடாரமுமாக 3 கூடாரங்களைப் போடுவோம் என்று பேதுரு கூறினான். அவன் தேவபிரசன்னத்தை வாஞ்சித்தான். ஓய்வுநாளை பரிசுத்தமான நாளாக, மகிமையான நாளாக, மகிழ்ச்சியின் நாளாக மாற்றுங்கள். கர்த்தருக்குப் பிரியமாக ஆராதனை செய்யுங்கள். தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்தால் அது அவர் பார்வையில் பிரியமாக இருக்கும். தேவதூதர்களும் உற்று நோக்குகிற ஆராதனையாக இருக்க வேண்டும். அழகாக இசை வாசித்து அழகாக, நேர்த்தியாக கைகளைத் தட்டி, உற்சாகமாகப் பாடித்துதித்தால் அது தேவன் பார்வையில் பிரியமானது. அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும், தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ள வேண்டும். ஆராதனையில் கர்த்தருடைய வசனம் அதிகாரத்தோடும், வல்லமையோடும் வெளிப்பட வேண்டும்; சுகம், விடுதலை உண்டாக வேண்டும்; அதிசயங்கள், அற்புதங்கள் நடக்க வேண்டும். தேவ சமுகத்தில் தேவ மகிமை இறங்கி வர வேண்டும். தம் கிரியைகள், அநந்த ஞானம் சபை மூலம் வெளிப்பட வேண்டுமென்றும் தேவன் ஆவலாயிருக்கிறார். தேவ மகிமை, தேவ நியாயங்கள் ஆலயத்தில் வெளிப்பட வேண்டும். சாலமோனிலும் பெரியவர் தேவாலயத்தில் இருக்கிறார். ஆகவே நியாயம் பெற்றுக் கொள்ள ஆலயத்திற்கு வந்து அவரை ஆராதிக்க வேண்டும். சாலமோனிலும் பெரியவரே! எங்களுக்கு செம்மையாய் நியாயம் செய்யும் என்று ஆலயத்தில் வந்து ஜெபிப்பவர்களுக்கு செம்மையாய் நியாயம் கிடைக்கும்.

## 159. ஏன் ஜனங்கள் எச்சரிக்கப்பட வேண்டும்?

எச்சரிப்பில்லாமல் பயம் இல்லை, பயம் இல்லாமல் கீழ்படிதல் இல்லை. கீழ்படிதல் இல்லை என்றால் வாக்குதத்தமும் இல்லை. ஆண்டவரின் வாக்குதத்தம் இல்லாமல் ஆசீர் இல்லை; ஆசீர் இல்லாமல் மேன்மை இல்லை, ஆகவே முதலாவது எச்சரிப்பு வேண்டும்.

தாலாட்டுப் பிரசங்கம் தான் எல்லாரும் விரும்புவார்கள். ஆனால் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமானால் நாம் எச்சரிப்பின் சத்தம் கேட்டு கீழ்படிய வேண்டும். காதுள்ளவன் கேட்கக் கடவன். எல்லா ருக்கும் காதுகள் உண்டு. காதுகள் இருந்தும் அநேக ஜனங்களுக்கு எச்சரிப்பின் சத்தம் கேட்க அந்த காதுகள் திறக்காது. ஆலயம் என்பது தேவ எச்சரிப்பு விளங்கும் இடமாக இருக்க வேண்டும் தவறு எது என்பதை ஜனங்களுக்கு எடுத்துக் கூறாவிட்டால் அவர்கள் தவறிக் கொண்டேயிருப்பார்கள். நரக வாசல் இன்னும் திறந்து கொண்டே இருக்கும். தேசமெங்கும் எச்சரிப்பின் வார்த்தைகளை பிரசங்கிக்கிற ஊழியர்கள் எழும்ப வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும்.

ஆண்டவர் எப்போதும் எச்சரித்துக் கொண்டே இருப்பார் என சொல்ல முடியாது. என் ஆவி என்றைக்கும் மனுஷனோடு போராடுவதில்லை என அவர் சொல்கிறார். இன்று அவர் சத்தத்தைக் கேட்பீர்களாகில் இதயத்தை கடினப்படுத்தாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள். எந்த சுவரொட்டிகளிலும் வாக்குத்தத்த வசனங்கள் தான் எழுதிப் போடுகிறார்கள். எச்சரிப்பின் வசனங்கள் ஒரு இடத்திலும் எழுதப்படவில்லை. நாள்காட்டியிலும் வாக்குத்தத்தங்கள் தான் எழுதப்பட்டிருக்கிறது. வேதத்தில் கூறப்பட்டுள்ள எச்சரிப்பின் வார்த்தைகளை நாம் கவனமாக ஆராய்ந்து பார்த்து, அந்த வார்த்தை களின்படி நாம் நடக்கிறோமா இல்லையா என்பதை ஒவ்வொரு நாளும் சோதித்துப் பார்க்க வேண்டும்.

**160. எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாய் இருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருப்பார் (ரோமர் 9/13) - இதன் பொருள் என்ன?**

தேவனின் சிநேகம், இரக்கம், மனதுருக்கம் - இம்மூன்றிலும் மேலானது அவர் மனதுருக்கம், நாம் அவர் மனதுருக்கத்திற்குள் வர வேண்டும். அவர் சிநேகத்திற்குள் வருவது என்றால் அவர் அன்பிற்குள் இருப்பது. வீட்டில் செல்லமாய் ஒரு நாய் வளர்க்கிறீர்கள்; உங்கள் பிள்ளையையும் செல்லமாய் வளர்க்கிறீர்கள். பிள்ளைக்கும் சுகமில்லாமல் வந்துவிட்டது. நாய்க்கும் சுகமில்லாமல் வந்து விட்டது. எதன் மேல் உங்கள் கண்பார்வையும் மனதுருக்கமும் அதிகமாக இருக்கும்? பிள்ளையின் மேல் தானே! பிள்ளையைத் தான் முதலாவது காப்பாற்ற நினைப்பீர்கள். நாயை நீங்கள் வெறுக்கவில்லை. ஆனால் மனதுருக்கம் அதிகமாக அந்த பிள்ளையின் மேல் தான் இருக்கும். அது போல ஆண்டவர் நம் மேல் சிநேகம் வைப்பதற்கும் மனதுருக்கம் வைப்பதற்கும் வித்தியாசம் உண்டு. அவர் மனதுருக்கம் இருந்தால் ஒரு

சிறிய முள்கூட குத்த விடமாட்டார். அவர் மனதுருக்கம் இருந்தால் உங்களைத் தொடுகிறவன் அவர் கண்மணியைத் தொடுகிறான் என்றே அவர் நினைப்பார். நாம் எந்த அளவுக்கு ஆண்டவர் மேல் அன்பு வைக்கிறோமோ, அந்த அளவுக்கு நம் மேல் மனதுருக்கத்தைக் கூட்டுவார். நாம் எவ்வளவுக்கெவ்வளவாய் விலகிப் போகிறோமோ அந்த அளவுக்கு அவர் மனதுருக்கத்தையும் சிநேகத்தையும் இழந்து போகிறோம்.

**161. வாழ்த்தும் பழக்கம் வேண்டுமா?**

மரியாள் எசபெத் வீட்டிற்குச் சென்று அவளை வாழ்த்தினாள் மரியாளை எசபெத் ஆசீர்வதித்தாள். தேவன் எசபெத்துக்கு நன்மை செய்ததை அறிந்த மரியாளுக்கு சந்தோஷம் வந்தது; பொறாமை வரவில்லை. யோவான் ஸ்நானகன் தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான். யோவானும் பரி. ஆவியானவரும் சேர்ந்து களிகூர்ந்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகளும் ஒருவர் வாழ்வைக் கண்டு மற்றவர்கள் சந்தோஷப்பட வேண்டும்; வாழ்த்த வேண்டும்; இன்னொருவர் வாழ்வைக் கண்டு பொறாமைப் படக்கூடாது. ஒருவரையொருவர் வாழ்த்தும்போது ஆவியானவர் சந்தோஷப்படுவார். பொறாமைப்படும் போது ஆவியானவர் துக்கப்படுகிறார். ஆகவே பொறாமையை அகற்றி விட்டு ஒருவரையொருவர் மனபூர்வமாய் நேசியுங்கள்; ஆசீர்வதியுங்கள். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஜெபிக்க வேண்டும்.

**162. பரி.ஆவி உன்னில் நிலைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?**

தாவீதும், சவுலும் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் தான். சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என பாடிய வேளையில் சவுலுக்கு தாவீதின் மேல் பொறாமை வந்தது. பொறாமை வந்தவுடன் பரி.ஆவி அவனை விட்டு விலகி விட்டார். தேவனால் விடப்பட்ட அசுத்த ஆவி சவுலை அலைக்கழித்தது.

பொறாமை சுபாவம் இருந்தால் பரி.ஆவி உன்னில் நிலைத்திருக்கமாட்டார். ஆகவே ஒருவரையொருவர் வாழ்த்துங்கள், ஆசீர்வதியுங்கள், ஜெபியுங்கள். விசுவாசத்தில் பெலவீனமானவர்களையும் சேர்த்து கொள்ள வேண்டும். பிறரை அவிசுவாசப்படுத்தக் கூடாது. நாம் எதைச் செய்தாலும் பிறருக்கு இடறல் உண்டாகும்படி செய்யக் கூடாது. நாம் செய்கிற காரியத்தினால் பிறருக்கு விசுவாசமும், தைரியமும் வர வேண்டும். நாம் செய்கிற காரியத்தினால் பிறருக்கு

கஷ்டம் வருகிறதா? நஷ்டம் வருகிறதா? சோர்வு வருகிறதா? என்பதை நிதானித்துப் பார்க்க வேண்டும். உன் வார்த்தையால், பார்வையால், செயலால் பிறரைக் காயப்படுத்துகிறாயா? காயப்படுத்தினால் ஆவியானவர் உன்னில் நிலைத்திருக்க மாட்டார்.

**163. சரீர பிரகாரமான வேதனையிருந்து விடுதலை பெற என்ன செய்ய வேண்டும்?**

எல்லா வேதனைகளையும் ஆண்டவர் தீர்க்க வல்லவர் என்பதை விசுவாசிக்க வேண்டும் (மத்.4/24). மெய்யாகவே அவர் நமது பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு நம் நோய்களை சுமந்தார் என்பதை விசுவாசிக்க வேண்டும் (மத்.8/17). ஏதேன் தோட்டத்திலே ஆதாம் ஏவாளின் சரீரங்களிலே வியாதி இல்லை; நோவு இல்லை; வேதனை இல்லை, விலக்கப்பட்ட கனியை புசித்தபடியால் தான் வியாதி வந்தது; மரணமும் வந்தது. அற்பமான சரீரம் வந்தது.

நம் வேதனைகளையெல்லாம் சிலுவையிலே சுமந்தார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். (ஏசாயா.53/4). ஆகவே நம் துன்பங்களிலே, பாடுகளிலே, வேதனைகளிலே நமக்கு உதவி செய்ய வல்லவர் என்பதையும் விசுவாசித்து அறிக்கை பண்ண வேண்டும் (எபி.2/18) அப்படியானால் வியாதி வரவே வராதா? என நீங்கள் கேட்கலாம். உங்கள் பெலவீனங்களிலே, நோய்களிலே, வேதனைகளிலே அவர் உங்களைத் தாங்குவார் (சங்.41/2). வியாதிகள் வந்தாலும் அதைத் தாங்குவதற்கு கர்த்தர் உனக்கு பெலன் கொடுப்பார்; வியாதியிருந்து ஏற்ற வேளையிலே விடுதலையும் கொடுப்பார். தாங்குவார், ஏந்துவார், சுமப்பார், தப்புவிப்பார்.

ஆண்டவரை அண்டிக் கொள்வதால் அவரே நமக்கு பரிகாரியாய் வருகிறார். ஆகவே நமக்கு முதல் மருத்துவர் இயேசு. ஏனென்றால் அவர் நம் வருத்தங்களில், வேதனைகளில் நம்மைத் தாங்குகிறார்.

பவுல் தன் சரீரத்திலுள்ள முள் நீங்கும்படி 3 முறை வேண்டிக் கொண்டான். இது வேதனை உண்டாக்குகிற ஒரு வியாதியாகும்.

வ களிலும் வித்தியாசம் உண்டு. வ களின் அளவுகள்:

| | |
|---|---|
| 1. மாரடைப்பு வ | 2. பிரசவ வ |
| 3. எலும்பு முறிவு வ | 4. கல்லடைப்பு வ |
| 5. பல் வ | 6. வயிற்று வ |
| 7. தலை வ | |

எப்பேர்பட்ட வ யாக இருந்தாலும் உன்னை கர்த்தர் அவைகளில் தாங்குவார்; நீ அவரை நோக்கி கூப்பிட்டால் ஆபத்திலே

அவர் உன்னைத் தாங்குவார். அந்த வேதனை உன்னை நசுக்க முடியாது. வேதனையை அவர் தீர்ப்பார். வேதனையில் தாங்குவார். எல்லாருடைய வேதனைகளையும் அவர் சுமந்தார். அவர் சுமக்காத வேதனை எதுவும் இல்லை.

**ஜெபம் :** அப்பா பிதாவே! என் சரீரத்தை உம் கரத்திலே கொடுக்கிறேன், ஆண்டவரே, நீர் சுமக்காத வியாதி, வேதனை எதுவும் இல்லை. சிலுவையில் எல்லா வேதனைகளையும் சுமந்தவரே! என் வியாதிகளை சுமக்க வல்லவரே! வேதனையுள்ள சரீரத்தின் பகுதியை உம் கரங்களில் கொடுக்கிறேன். உம் கரம் அந்த இடத்தைத் தொடுவதாக. எப்பேர்பட்ட வேதனையாக இருந்தாலும் ஆண்டவரின் கரம் வேதனையை மாற்றுவதாக; வேதனையில் தாங்குவதாக; வேதனையில் உதவி செய்வதாக, உம் தாங்கும் கரம் என் மேல் வைக்கப்படுவதாக, அப்பா பிதாவே! இது வரை தீராமல் இருந்த சகல வேதனைகளை உம் தாங்கும் கரத்தால் முற்றிலும் என் சரீரத்தை விட்டு நீக்கிப் போடுவீராக

இயேசப்பா! அடிக்கடி வேதனைப் படுகிற என் சரீரத்தின் பாகத்தை விசுவாசத்தோடு தொட்டு ஜெபிக்கிறேன். அதே இடத்திலே உம்முடைய காயப்பட்ட கரம், தழும்புகளுள்ள கரம் வைக்கப்படுவதாக, இயேசுவே உம் கரம், உம் தழும்புகள் சகல வேதனைகளையும் மாற்றுவதாக. உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்று ஒரு வார்த்தை சொல் சரீரப்பிரகாரமான சகல வேதனைகளையும் ஆண்டவர் எனக்கு மாற்றிக் கொடுப்பீராக – ஆமென்.

### 164. இருதய துக்கம் மாற என்ன செய்ய வேண்டும்?

இருதயத்திலே பலவிதங்களிலே துக்கம் உங்களுக்கு வரலாம். ஆனாலும் இந்த துக்கங்களுக்கு மருந்தாக ஆண்டவர் இருக்கிறார். துக்கம் நம் இதயத்தை அடைக்கலாம். ஆனால் அவர் நம் துக்கங்களை யெல்லாம் சுமந்தார் என்பதை விசுவாசிக்க வேண்டும். சிலுவையிலே துக்கம் நிறைந்தவராய் ஆண்டவர் இருந்தார். (MAN OF SORROWS) . ஏன்? நம் எல்லாருடைய துக்கங்களையும் சுமந்தபடியால் தான். அவர் துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார். நம் வாழ்வில் வரும் எல்லா துக்கங்களிலே ஆண்டவர் நம்மைத் தாங்குவார். துக்கம் தாங்க முடியாவிட்டால் அவரை நோக்கி ஜெபியுங்கள். அப்போது அவர் உங்களைத் தாங்குவார்.

**ஜெபம் :** அப்பா பிதாவே! உம் கரம் என் இருதயத்தைத் தொடுவதாக. என் இருதயத்தில் மாறாமல், தீராமல், ஆறாமல் இருக்கிற துக்கங்கள் யாவும் மாறத்தக்கதாக, யாவும் தீரதக்கதாக மாறாதவரே! உம்மை நோக்கிக்

கூப்பிடுகிறேன். உம் கரம் என் துக்கங்களிலே தாங்கிக் கொள்வதாக. உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும் என்ற வார்த்தையின்படி என் இருதயத்திலுள்ள எல்லா கசப்பு, துக்கம், வெறுப்பு இவைகளை மாற்றி உம் சமாதானம், ஆறுதல், சந்தோஷம், நிம்மதி, இளைப்பாறுதல் தாரும். துக்கங்களிலே தாங்கிக் கொள்ளும், கர்த்தாவே! ஆமென்.

**165. இருதயத்தின் கவலை மாற என்ன செய்ய வேண்டும்?**

சில பொறுப்புகள் நமக்கு இருக்கிறது. இந்த பொறுப்புகளை நிறைவேற்றுவது நம் கடமையாக இருக்கிறது. சில சமயங்களில் இந்த கடமைகளைச் செய்ய முடியாமல் போகிறது. அப்போது நமக்கு கவலை ஏற்படுகிறது. சிலருக்கு எதிர்காலத்தைக் குறித்த கவலை இருக்கும். சில காரியங்களைக் குறித்த பயத்தால் சிலருக்கு கவலை வருகிறது. எந்தக் காரியத்தைக் குறித்து அதிகம் கவலைபடுகிறீர்களோ அந்த காரியங்களை ஆண்டவர் மேல் வையுங்கள். அந்த காரியங்களுக்காக அதிகமாக ஜெபியுங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள். (I பேதுரு 5/7); ஜெபித்த பின் அந்த காரியங்களுக்காக தேவனை ஸ்தோத்தரியுங்கள். அப்போது அந்த கவலைகள் உங்கள் இதயத்தை விட்டு மாறிப் போகும். கர்த்தர் உங்களுக்காக யாவும் செய்து முடிப்பாக என விசுவாசியுங்கள்.

**ஜெபம் :** அப்பா பிதாவே! என்னை விசாரிக்கிறவரே! அடிக்கடி என் இருதயத்தை ஒடுக்குகிற கவலை, என்னை பயப்படுத்துகிற கவலை, என்னை பாரப்படுத்துகிற கவலை யாவையும் உம் பாதத்திலே இறக்கி வைக்கிறேன். என் இதயத்தின் பாரங்களையெல்லாம் ஆண்டவர் தாங்குவீராக. அந்த கவலைகள் யாவும் மாறுவதாக. கவலைகள் மாறத்தக்கதாக அடைக்கப்பட்ட வாசல்களைத் திறப்பீராக. யெகோவா யீரேயாக இருக்கிறவரே! எனக்காய் எல்லாம் பார்த்துக் கொள்ளும். ஆமென்.

**166. பிசாசினால் வரும் வேதனையை எப்படி மேற்கொள்வது?**

என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என மத்.15/22ல் வாசிக்கிறோம். பிசாசு கொடுக்கும் வேதனை ஒரு முள் போல இருந்து வேதனைப்படுத்தும். எந்த மருத்துவ சிகிச்சைக்கும் கட்டுப்படாது. ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமே அந்த வேதனையை மேற்கொள்ள முடியும்.

**ஜெபம் :** அப்பா பிதாவே! பிசாசினால் என் சரீரத்தில், என் இதயத்தில், என் உள்ளத்தில் வருகிற சகல வேதனைகளையும் மாற்ற வல்லவரே! வேதனைகளுக்கு பின்னணியில் இருக்கிற சகல அசுத்த ஆவிகளையும்

ஆண்டவர் சுட்டெரிப்பீராக. 'உன் வேதனை நீங்கி சுகமாயிரு' என ஒரு வார்த்தை சொல்வீராக. உம் வார்த்தையினால் பிசாசினால் வருகிற சகல வேதனைகளும் என்னை விட்டு மாறிப்போவதாக ஆமென்.

**167. சத்துருக்களால் வரும் நிந்தை வேதனையை எப்படி ஜெயிப்பது?**

வியாதியோ, பெலவீனமோ, பிசாசு தொல்லையோ ஒன்றும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மனிதர்களின் நிந்தைகளால் உங்களுக்கு வேதனை இருக்கும். அவர்கள் வாயின் வார்த்தைகள் அம்பு போல இருக்கும். நீதி 30/14ல் மனுஷரில் எளியவர்களை பட்சிப்பதற்கு கட்கங்களுக்கொத்த பற்களும், கத்திகளையொத்த கடைவாய்ப்பற்களையு முடையவர்கள் உண்டு என வாசிக்கிறோம். இவர்கள் தங்கள் வாயின் வார்த்தைகளாலே உங்களை வேதனைப்படுத்துவார்கள். 'ஆண்டவரே அவர்கள் நாவுகளை கட்டிப்போடும்' என ஜெபிக்க வேண்டும்.

**ஜெபம் :** கர்த்தாவே! சத்துருக்களின் வார்த்தைகளால் எங்களுக்கு வேதனை வராதபடிக்கு ஆண்டவர் அவர்கள் நாவுகளைக் கட்டிப் போடுவீராக. துஷ்டன் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு, மேற்கொள்ளாதபடிக்கும் தேவபிள்ளைகளுக்கு விரோதமாய் எழும்பும் சகல துஷ்டர்களையும் நீரே கட்டிப் போடுவீராக. அவர்கள் நாவுகளும், கால்களும், கரங்களும் எங்களுக்கு விரோதமாய் செயல்பட முடியாதபடிக்கு நீரே கட்டிப் போடுவீராக. ஆமென்.

**169. ஆவியில் வேதனை என்றால் என்ன?**

லாசரு மரித்த வேளையிலே ஜனங்கள் அழுகிறதை கண்ட போது இயேசு ஆவியிலே கலங்கி வேதனைப்பட்டார் (யோ 11/33). ஆத்துமாவில் எத்தனையோ மக்கள் மரித்து போய் கொண்டிருக்கிறார் கள். அவர்களுக்காக அழுது ஜெபிக்க ஆளில்லை. உங்கள் வீட்டாரின் இரட்சிப்பிற்காக நீங்கள் ஜெபிக்காமல் வேறு யார் பாரத்தோடு ஜெபிக்க முடியும்? உன் பிள்ளைக்கு வியாதி வந்தால் கவலைப் படுகிறாய். ஆனால் அந்த பிள்ளை இரட்சிக்கப்படவில்லையே என கவலைப்படுகிறாயா? அந்த பிள்ளை நரகத்திற்கு போய் விடக் கூடாது என அதற்காக கவலைப்பட்டு நீ ஜெபித்தால் உனக்கு ஆவியில் வேதனை உள்ளது. பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறி வரான். ஒரு மனிதன் மரித்த பிறகு எத்தனை நாட்கள் பூசை வைத்தாலும் பயனில்லை. ஆகவே இப்பொழுதே உங்களுக்கு அருமையானவர்களின் இரட்சிப்பிற்காக அழுது ஜெபியுங்கள். ஆவியில் வேதனை உள்ளவர்களாய் மாறுங்கள்.

**170. ‘அத்துமாவின் வேதனை’ என்றால் என்ன?**

சகேயு மனம் திரும்பினான். ஆண்டவர் அவன் வீட்டில் தங்கப் போனார். “இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது” என்றார். உடனே சகேயு, “ஆண்டவரே நான் யாரிடமாவது அநியாயமாக வாங்கினதுண்டானால் 4 மடங்கு அதைத் திருப்பி கொடுத்து விடுகிறேன்” என்றான். இது ஒரு மனிதன் செய்த பாவத்தினிமித்தம் அவன் ஆத்துமாவில் வர வேண்டிய வேதனை. நாம் பாவம் செய்யும் போது அந்த பாவத்தினிமித்தம் நம் ஆத்துமாவில் வேதனை வர வேண்டும். அந்த பாவத்திற்கு பரிகாரம் செய்யப்பட வேண்டும். ஆகவே தான் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளை நாம் கொடுக்க வேண்டும் என வேதம் சொல்கிறது. ஆத்துமாவில் வேதனை இருந்தால் மறுபடியும் பாவம் செய்யமாட்டோம்; செய்த பாவத்திற்கு மன்னிப்பு கேட்போம்; பரிகாரமும் செய்வோம்.

ஆத்துமாவில் வேதனையும், ஆவியில் வேதனையும் உனக்குள் இருந்தால், மற்ற எல்லா வேதனைகளையும் கர்த்தர் தாங்குவார்.

## ஜெபங்கள்

## ஜெபம் - 1

**ஆவியில் வேதனை, ஆத்துமாவில் வேதனை பெற்றுக் கொள்ளும்படி ஜெபிப்போம் :**

அப்பா பிதாவே! இந்த 2 வேதனைகளும் எனக்குள் வரும் படியாக ஜெபிக்கிறேன். என் ஆவியில் வேதனை தாரும். அழிந்து போகிற ஆத்துமாக்களைக் காணும்பொழுது அவர்கள் இரட்சிப்பிற்காக ஜெபிக்க உதவும். என் ஆவியில் வேதனைப்பட்டு, கண்ணீரோடு அந்த ஆத்துமாக்களுக்காய் ஜெபிக்கிறவனாய் என்னை மாற்றும். என் ஆத்துமாவிலே என் பாவங்கள் நிமித்தம் வேதனை இருப்பதாக, மனம் திரும்புதலுக்கேற்ற கனிகள் கொடுக்கத்தக்கதாக ஆண்டவர் எனக்கு உதவி செய்வீராக. சகேயு செய்தது போல ஆத்துமாவிலே வேதனைபட்டு இன்னும் உமக்கு பிரியமான கனிகளை கொடுக்க உதவி செய்வீராக. எந்த வேதனையும் இல்லாத பரலோகம் உண்டு என்பதை விசுவாசிப்பேனாக. அதை அடையும் வரை ஆண்டவர் என்னைத் தாங்கிக் கொள்வீராக. இளைப்பாறுதன் தேவனே! இளைப்பாறுதல் தாரும். ஆமென்.

## ஜெபம் – 2

**நம் தேசத்தில் எச்சரிப்பின் சத்தம் தொனிக்க ஜெபிப்போம்:**

அப்பா பிதாவே! எங்கள் தேசத்திலே பாவத்தைக் குறித்த கண்டிப்பு இல்லை; விழிப்புணர்வு இல்லை. பாவங்களுக்கு ஏற்ற தண்டனை இல்லை. பாவத்தை பாவம் இல்லை என்று சொல்லும் காலம் வந்திருக்கிறது. துணிகரமாக பாவம் செய்ய அநேக வாசல்கள் விரிவாய் திறந்திருக்கிறது. தேசத்திலே எச்சரிக்கிற ஊழியர்கள் இல்லை, லஞ்சங்கள், கொள்ளைகள், பயங்கரவாதங்கள் பெருகுகிறது. பணம் இருந்தால் எதுவும் செய்யலாம் என்று சொல்லுகிற நிலமைகள் உள்ளது. பணம் தான் கடவுள் என்று சொல்லுகிற நிலைக்குள் இந்த தேசம் இருக்கிறது. யார் இந்த தேவன்? என்று உம்மை பரியாசம் பண்ணுகிற ஜனங்கள் பெருகிக் கொண்டு இருக்கிறார்கள். யார் எங்களை கேட்க முடியும்? நாங்கள் நினைத்ததை செய்வோம் என்று துணிகரமாய் பேசுகிற ஜனங்கள், அக்கிரமக்காரர்கள், பெருமைக்காரர்கள், பணக்காரர் கள் உண்டு, ஏழைகள் ஒடுக்கப்படுகிறார்கள்; பாவிகள் பெருகிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் மாறத் தக்கதாக ஆண்டவர் கிரியை செய்வீராக, பாவத்தைக் குறித்து கண்டிக்கிற ஊழியர்கள் எழும்புவார்களாக, ஜனங்களை எச்சரிக்கும் ஊழியர்கள் எழும்புவார்களாக. தேசமெங்கும் கர்த்தரின் வார்த்தை தொனிப்பதாக. கர்த்தரின் எச்சரிப்பின் சத்தம் தொனிப்பதாக. ஜனங்கள் எச்சரிக்கப்பட்டு மனந்திரும்புவார்களாக; உம் ராஜ்யத்தின் பிள்ளைகளாக மாறுவார்களாக தேசத்திலே பரிசுத்தம் உண்டாவதாக. தேசம் உம்மால் ஆசீர்வதிக்கப்படு வதாக. சர்வபூமியிலும் இந்திய தேசம் உன்னத நிலைக்குள் வருவதாக. இம்மையிலும் ஆசீர்வாதம் பெற்று மறுமையிலும் நித்திய ஜீவனை பெறுகிற பாக்கியம் தருவீராக. ஆமென்.

## ஜெபம் – 3

**பரிசுத்தத்தைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்:**

கர்த்தாவே! பரிசுத்தம் என் அலங்காரமாய் இருப்பதாக. என் ஆவி இருளடைந்திருக்கிறது. என் ஆத்துமா கறைபடிந்திருக்கிறது. என் ஆவியை வெளிச்சமாக்கும்; என் ஆத்துமாவை உம் பரிசுத்த இரத்தத்தால் கழுவி தூய்மையாக்கும். உறைந்த மழையிலும் வெண்மை யாக்கும். என் ஆத்துமா வாழ்வது போல எல்லாவற்றிலும் வாழப்

பண்ணும். நித்திய இரத்தம் என் மேல் தெளித்து பரிசுத்த அலங்காரம் தாரும். என் பழுதெல்லாம் மாற்றும். என் மேல் கண் வைத்து ஆசீர்வதியும். முடிவு பரியந்தம் சாட்சியாய் நிறுத்தும். ஆமென்.

## ஜெபம் – 4

**ஆண்டவர் சித்தம் செய்ய நமக்கு உதவும்படி ஜெபிப்போம்.**

அப்பா பிதாவே! உம் திருசித்தம் செய்ய ஒப்புக் கொடுக்கிறேன்; அர்ப்பணிக்கிறேன்; சமர்ப்பிக்கிறேன் தத்தம் செய்கிறேன். ஆண்டவரே! உம் திருசித்தம் என்னில் நிறைவேறுவதாக. உம் திருநாமம் என்னில் மகிமைப்படுவதாக. உம் ராஜ்யம் வளர்வதாக. உம் வல்லமை, வரங்கள், ஞானம், சுகம், பெலன் தருவீராக, புயல் வீசும் கடல் தடுமாறும். படகை நங்கூரம் தாங்குவது போல என் வாழ்க்கை படகிலே புயல் வீசினாலும் தாங்கும் நங்கூரமாய் ஆண்டவர் வருவீராக. எது வந்தாலும், என் வாழ்வில் வரும் எல்லா காரியங்களும் ஆண்டவர் மகிமைக்காகவே இருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். கலங்கரை விளக்காய், ஒளிகாட்டியாய், வழித்துணையாய், வருவீராக, என்றென்றும் உமக்கு சித்தமான பாதையில் நடத்தும். இருள் நீக்கும் சுடரே! எல்லா இருளையும் என்னை விட்டு அப்புறப்படுத்திபோடும். ஆமென்.

## உலகமும் ஆளுகையும்

1. அமெரிக்காவின் உற்பத்தி சார்ந்த பொருளாதாரம் வலுவிழந்துள்ளது. அமெரிக்காவை சார்ந்த பொருளாதாரத்தை மேற்கொண்ட பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் பின்னடைந்துள்ளன. இதனிடையே Bric அமைப்பு உருவாகியுள்ளது. பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சைனா கூட்டணியால் இந்த நான்கு நாடுகள் பாதுகாக்கப்படுவதாக.

2. இந்தியாவில் பயங்கரவாதம்

   1. (உம்) மும்பை தாக்குதல்
   2. பாகிஸ்தானில் பயங்கரவாதம்
   3. ஆப்கானில் பயங்கரவாதம் கட்டிப் போடப்படுவதாக.

3. கடைசிக்காலத்தில் தாழ பூமியில் அக்கினி, புகைக்காடாகிய அதிசயம் காட்டுவேன் என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஐஸ்லாந் நாட்டு எரிமலை வெடித்து தீப்பிழம்புகளை கக்குகிறது. சாம்பல் வானமண்டலம் முழுவதும் பரவியுள்ளது. பிரிட்டன் மட்டுமன்றி நார்வே, பின்லாந் வான்பாகங்களில் புகைமண்டலம் காட்சியளிக்கின்றது. எரிமலை பெயர் ஜாலாஜோகுல். இது பனிக்கட்டி மலையில் உள்ளது. அதனால் வெள்ளப் பெருக்கு வந்துள்ளது. இந்த எரிமலையைச் சுற்றி 3LA பேர் வசிக்கின்றார்கள். இவர்கள் காக்கப்படுவார்களாக.

4. மேற்கு வங்கம், பீஹார், அசாமில் சூறாவளி மழை பாதிப்புகள் சீரமைவதாக.

5. இந்திய கள்ளநோட்டுகள் பிடிபடுவதாக.

6. பஞ்சாபைப் பிரித்து காஸ்தான் தனிநாடை உருவாக்க வயுறுத்தும் காஸ்தான் தீவிரவாதக்குழு கட்டிப் போடப்படுவதாக.

7. பாகிஸ்தானிய ஆட்சிமுறை ராணுவத்தின் கட்டுப்பாட்டிருந்து முழுமையாய் விடுபடுவதாக.

8. உலகில் உள்ள அணு ஆயுதங்களில் 22,000 அமெரிக்கா, ரஷ்யாவிடம் உள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து, இஸ்ரேல், வடகொரியா சேர்ந்து 1000 அணு ஆயுதங்கள் வைத்துள்ளன.

அணு ஆயுதங்களைக் கட்டிப்போடும் கர்த்தாவே!

9. வங்கதேச எல்லையில் வேயமைப்பது நிறைவடைவதாக.

10. ஹோ பண்டிகையில் தூவும் வண்ணங்கள், கோலப்பொடி, ப்ஸ்டிக், குளிர்பானங்கள், மிட்டாய்கள், பெயிண்டுகள் இவைகளில் உள்ள காட்மியம், காரீயம், பாதரசம் ஜனங்களைப் பாதிக்கும் என்ற விழிப்புணர்வு உண்டாவதாக.

11. அணுசக்தி நிலையங்கள் பாதுகாக்கப்படுவதாக. பயங்கரவாதி களிடம் அணு ஆயுதங்கள் சிக்கும் அபாயங்கள் தடுக்கப்படுவதாக.

12. தாபான்களுக்கு விரோதமாக 1,40,000 பாகிஸ்தான் ராணுவவீரர் போராடுகிறார்கள். இவர்கள் காக்கப்படுவார்களாக.

13. சோமாய கடற்கொள்ளையர்கள் பிடிபடுவார்களாக.

14. கடந்த ஆண்டில் மட்டும் குற்றால மலைப்பகுதியில் 8 தீ விபத்துகள் நடந்துள்ளன. காரணம் கண்டுபிடிக்கப்படுவதாக.

15. தமிழகத்தில் நிலத்தடி நீர் வரவர கீழே சென்று கொண்டிருக்கிறது. அடுத்த சில ஆண்டுகளில் வறட்சி மாநிலமாக சொல்லப்படும் நிலையும் வரலாம்.

கர்த்தாவே! பஞ்சத்திலும் காப்பாற்றும்.

16. இந்தியாவில் சாலைவிபத்தில் ஆண்டுக்கு 1 லட்சம் பேர் உயிரிழக்கிறார்கள். இதில் உலகிலேயே இந்தியா முதடம் வகிக்கிறது. உலகில் உள்ள மொத்த வாகனங்களில் 1% மட்டுமே இந்தியாவில் உள்ளது. காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு சீரமைக்கப்படுவதாக.

17. அணுமின்நிலைய ஒப்பந்தம், மரபணு மாற்றிய விதை ஒப்பந்தம், சிறப்பு பொருளாதார மண்டல ஒப்பந்தம் போன்றவற்றில் இந்தியா சிக்கிக் கொள்ளாதிருப்பதாக.

18. இர்ரேடியேட்டர் (கதிர்வீச்சுக்கருவி) பழைய இரும்புக்கடைக்கு வந்தது. அதை கடைக்காரர் உடைத்த போது கதிர்வீச்சால் இறந்தார். 11 பேர் காமா கதிர் வீச்சால் பாதிக்கப்பட்டனர்.

காமாகதிர்வீச்சு தீவிரவாதங்கள் கட்டிப்போடப்படுவதாக.

19. அணுஆயுதங்கள் வைப்பதில் உள்ள கட்டுப்பாடுகளை சர்வதேச நாடுகள் சரியாய் நியமிப்பதாக.

20. அமெரிக்காவின் ஆயுதசப்ளைகள் கட்டிப்போடப்படுவதாக. (இந்தியா, பாகிஸ்தானுக்கு)

21. ஆர்.டி.எக்ஸ் வெடி பொருள், ஹெராயின் போதைப் பொருள் பிடிபடுவதாக.

22. கிர்கிஸ்தான் கலவரங்கள் மாறுவதாக.